**அரசு மேனிலைப் பள்ளி**
**முள்ளண்டிரம், திருவண்ணாமலை மாவட்டம்**
**மாதாந்திரத் தேர்வு 2024 - தமிழ்**

**வகுப்பு 10** **மதிப்பெண்கள்: 50** **நேரம்: 1.30மணி**

**அ) உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **8x1=8**

1) மெத்த வணிகலன் என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெருங்கலன்களும்
இ) ஐம்பெருங்காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2) "காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்"இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) ஈருகும் சண்டும்

3) "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு
ஈ)உவமை, எதுகை

4) "பாடு இமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

5) 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே
அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய இ) கேட்டவர்; பாடிய
ஈ) பாடல்; கேட்டவர்

6) தொகைநிலைத் தொடர்கள் வகைப்படும்.
அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 8

**பாடலைப் படித்து விடை தருக:**

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைக்கிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு

7) இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) அதிவீரராம பாண்டியன் ஆ) சந்தகவிமணி தமிழழகனார்
இ) பாரதியார் ஈ) பெருஞ்சித்திரனார்

8) இப்பாடலில் வரும் 'ஆழி' என்பதன் பொருள் ________
அ) துன்பம் ஆ) ஆறு இ) கடல் ஈ) சங்கு

**ஆ) எவையேனும் ஆறனுக்கு விடை தருக: (16 கட்டாய வினா)** **6×2=12**

9) 'வேங்கை' என்பதை தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்தி காட்டுக.

10) வசன கவிதை - குறிப்பு வரைக.

11) தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

12) தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13) பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

14) “மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!”
இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

15) கலைச்சொல் தருக:
அ) Homograph ஆ) Storm

16) ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

**இ) எவையேனும் நான்கனுக்கு விடை தருக (17கட்டாய வினா) 4×3=12**

17) அடிமாறாமல் எழுதுக:
'சிறுதாம்பு தொடுத்த' எனத் தொடங்கும் பாடல் (அல்லது)
'அன்னை மொழியே' எனத் தொடங்கும் பாடல்.

18) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

19) மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.

20) புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

21) சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல உரையாடல் அமைக்க,

22) தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவன் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தான். இப்பகுதியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளை குறிப்பிட்டு விரித்து எழுதுக.

**ஈ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 2×5=10**

23) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளைத் தொகுத்து எழுதுக
(அல்லது)
மாநில அளவில் நடைபெற்ற “மரம் இயற்கையின் வரம்” எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

24) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



**உ) விரிவான விடையளிக்க: 1×8=8**

25) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும்தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.
(அல்லது)
புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

www.Padasalai.Net